**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– வேலூர் மாவட்டம் திருப்பத்தூர்– உதவும் உள்ளங்கள்– தன்னார்வ தொண்டு நிறுவனம் – மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லத்தில் தங்கியுள்ள உள்ளுறைவோர்களின் எண்ணிக்கையினை 30லிருந்து 50 ஆக உயர்த்துதல் நிர்வாக அனுமதி வழங்குதல்– ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.44

நாள்:12–08–2015
மன்மத, ஆடி 27,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.204, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 30–06–2005.
2. அரசாணை(நிலை) எண்.141, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 15–10–2009
3. அரசாணை(நிலை) எண்.90, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்21–10–2013.
4. அரசாணை(நிலை) எண்.83, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 10–12–2014.
5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.1113/ம.இ.க4/2014, நாள் 11.8.14, 8.10.14 மற்றும் 12.6.15.

--------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, வேலூர் மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான இல்லத்தினை உதவும் உள்ளங்கள், திருப்பத்தூர் எனும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் நிறுவ, ரூ.8.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கி வரும் 'உதவும் உள்ளங்கள்' எனும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்படும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லத்தில் பயனாளிகளின் எண்ணிக்கை 30 என நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மூன்று மாவட்டங்களுக்கு ஒரு இல்லம் என்ற அடிப்படையில், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 10 மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கி வரும் உதவும் உள்ளங்கள் நடத்தும் மனநலம்

பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லத்திற்கு 2013–14ல் தொடர திட்டத் தொடராணையும், மொத்தச் செலவினத்திற்கென ரூ.98,66,800/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளிடப்பட்டுள்ளது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில் திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள், அரசின் நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்பட்டு வருவாதகவும், 10 மாவட்டங்களில் அரசின் நிதி உதவியுடன் செயல்படும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்கள் 50 நபர்கள் வீதம் பயனடைந்து வருவதாகவும் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் இயங்கும் உதவும் உள்ளங்கள் மனநல காப்பகத்தில் 30 பயனாளிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், வேலூர் மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும், வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் இயங்கி வரும் “உதவும் உள்ளங்கள்” தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்படும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையை 30லிருந்து 50 ஆக உயர்த்தி ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஏற்று, தமிழகத்தில் முதன்முதலாக தொடங்கப்பட்ட வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான உதவும் உள்ளங்கள் மூலம் செயல்பட்டு வரும் இல்லத்தில் தற்போது 55 பயனாளிகள் தங்கி பயனடைய ஏதுவான கட்டமைப்பு வசதிகள் உள்ளதை கருத்திற் கொண்டு மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உள்ளது போன்று உள்ளுறைவாளர்களின் எண்ணிக்கையை 30லிருந்து 50 ஆக உயர்த்தி நிர்வாக அனுமதி மட்டும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.43458/நிதி(சந)/2015, நாள் 04.08.2015ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
வேலூர் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**நகல்:–**

நிதி (சந/வ.செ.பொது–I,வ.செ.பொது–II) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.